**மத்திய மாகாண சபை - 2017**

**-------------------------------------------------**

மத்திய மாகாண சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

---------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

--------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை

உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

---

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மத்திய மாகாண சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 மாகாண சபையின் நிதியம்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 31 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**2.2.2** ஏனைய கணக்குகள்

மீளாய்வாண்டிற்குரிய 2018 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்தல் முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

| | கணக்கின் பெயர் | 2017 ஆம் ஆண்டிற்குரிய | |
|---|---|---|---|
| | | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை |
| (அ) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 34 | 34 |
| (ஆ) | மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 66 | 66 |
| (இ) | மாகாண சபை உறுப்பினர்களுக்கான கடன் வசதிகள் முற்பணக் கணக்குகள் | 01 | 01 |
| (ஈ) | வணிக முற்பணக் கணக்குகள் | 08 | 08 |
| (உ) | நிதியங்கள் மற்றும் நியதிச்சட்டக் கணக்குகள் | 04 | 04 |
| (ஊ) | வருமானக் கணக்குகள் | 02 | 02 |
| | மொத்தம் | 115 | 115 |

2.2.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

-------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 ஒக்தோபர் 02 ஆந் திகதிய PED/POL/CIR/2013-3 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் அரச துறையின் நிறுவனங்களில் கணக்கு வைக்கும் போது அட்டுறு அடிப்படை பயன்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்நியதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் மூலதனச் சொத்துக்கள் கையேற்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 42,818,377 மற்றும் முன்னைய ஆண்டுகளின் மூலதனச் சொத்துக்களை கையேற்பதற்காக செலவிடப்பட்ட செலவினம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன்நிலையான சொத்துக்கள் கணக்கு வைப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நீதிமன்ற ஆவணங்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் முத்திரை வருமானம் ரூபா 6,747,015 ஆக இருந்த போதிலும் அது ரூா 7,537,635 என காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டின் வருமானம் ரூபா 790,620 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 02 சேகரிப்புக் கணக்குகளுக்குரிய ரூபா 286,799 கூட்டுத்தொகை குறைத்து நிதி நிலைமைக் கூற்றில் காசு மற்றும் வங்கி மீதிகளில் அதற்கு சமமானவற்றில் காண்பிக்கப்பட்டிருந்தன.

2.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

(அ) பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மத்திய மாகாண சபைக்குரிய 08 நிறுவனங்களால் 2003 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய 14 ஆண்டுகளின் ரூபா 10,882,342 ஆன கட்டுநிதி மீதிகள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) மாகாண சுகாதாரத் திணைக்களத்தினால் முற்பணத்தின் கீழ் செலவிடப்பட்ட ரூபா 142,699,951 தொகையை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

(i) அனைத்து மாகாணங்களுக்கு இடையேயான கடன் மீதிகளை தீர்வுசெய்யும் கணக்கின் கீழ் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட 11 நிறுவனங்களின் ரூபா 5,734,703 கூட்டுத்தொகையான மீதியை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வருடக் கணக்காக மாற்றமுராது முன்கொண்டு வரப்படும் வள நிலையத்தின் முற்பணக் கணக்கில் ரூபா 1,969,736 ஆன மீதியை கைத்தொழில் அமைச்சிற்கு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

மத்திய மாகாண சபையின் 69 நிறுவனங்களின் ரூபா 433,489,306 கூட்டுத்தொகையான பொது வைப்பு மீதிகளுக்குரிய காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) சட்டரீதியான ஏற்பாடுகள் | |
| (i) 2013 இன் 17 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1942 இன் 18 ஆம் இலக்க அரச சேவைகள் சேமலாப நிதிய அதிகாரச் சட்டம் | சபை செயலகத்திலிருந்து சம்பளம் பெறும் உறுப்பினர்களின், தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரின் தனிப்பட்ட பதவியணியினரின் 249 பேருக்காக 2013 ஆம் ஆண்டு முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செலுத்தப்பட்டிருந்த ரூபா 292,514,758 ஆன படிகளுக்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்காக ஊழியர் மற்றும் முதல்வர் செலுத்தப்பட வேண்டியப ங்களிப்பு முறையே ரூபா 35,101,771 மற்றும் ரூபா 23,401,175 அந்நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 1947 இன் 08 ஆம் இலக்க அரசின் காணிகள் கட்டளை சட்டத்தின் 217(2) ஆம் கட்டளையின் vi (ஆ) பிரிவு | வருடாந்த குத்தகை 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தம் செய்யப்படாததன் காரணமாக பாத்தஹேவாஹட்ட பிரதேச செயலக அதிகாரப்பிரதேசத்தில் அமைந்துள்ள காணி பள்ளேஓய சிறிய அளவிலான நீர் செயற்திட்டத்திலிருந்து மீளாய்வாண்டிற்காக ரூபா 480,000 குறைவாக அறவிடப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (iii) | மாகாண சபை சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (இ) பந்தி மற்றும் மத்திய மாகாண நிதி விதி 2.1 | 04 நிறுவனங்களிடமிருந்து மாகாண சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 4,156,000 ஆன பெறுவனவுகள் அந்நிறுவனங்களின் நலன்புரி சங்கங்களின் கணக்குகளிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. |
| (iv) | 1993 இன் 50 ஆம் இலக்க ஆபரண அதிகாரச்சட்டம் | இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாதிருந்த ஆபரண நிறுவனமொன்றுக்கு தும்பனே பிரதேச செயலகத்தினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. |
| (v) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச்சட்டத்தின் xiv ஆம் பந்தி மற்றும் 2015 யூலை 06 ஆந் திகதிய SEC/2015/05 ஆம் இலக்க சுற்றறிக்கை | 02 நிறுவனங்களின் 27 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணைளாயர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் உழைக்கும் போது வரி ரூபா 494,845 குறைத்துக அறவிடப்பட்டிருந்தது. |
| (vi) | 2009 பெப்ரவரி 20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் XII ஆம் அத்தியாயத்தின் 143 மற்றும் 147 ஆம் பிரிவுகள் | 03 கல்வி அலுவலகத்திற்குரிய 12 பாடசாலைகளின் 15 ஆசிரியர்கள் இலங்கை தரைப்படையின் சுழற்சி சேவைக்கு விடுவிக்கப்பட்டு 01 ஆண்டு முதல் 26 ஆண்டு வரையான காலம் கடந்திருந்த போதிலும் நியமன அதிகாரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன் 03 வலயங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த 08 ஆசிரியர்களின் 05 ஆண்டு காலம் கடந்திருந்த போதிலும் மீண்டும் ஆசிரியர் சேவைக்கு அறிக்கையிட்டிருக்கவில்லை. |
| (vii) | 2016 ஏப்ரல் 20 ஆந் திகதிய 1963/30 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரம் | மாகாண முறைசார் கல்விப் பிரிவின் அறிக்கையின் பிரகாரம் மத்திய மாகாணத்தினுள் 2017 ஆம் ஆண்டின் போது 5 வருடங்களுக்கும் 16 வருடங்களுக்கும் இடைப்பட்ட பாடசாலைக்குச் செல்லாத 848 பிள்ளைகள் இனங்காணப்பட்டிருந்ததுடன் |

| | | |
|---|---|---|
| | | அதில் மேலும் பாடசாலைக்கு அனுப்புவதற்காக இருந்த 223 பிள்ளைகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (viii) | மத்திய மாகாண சபையின் செயற்பாட்டு விதிக்கோவையின் 56 ஆம் பிரிவின் 3 ஆம் உப பந்தி | மாகாண அமைச்சரவை அங்கீகாரமின்றி ரூபா 6,842,009,245 ஆன 03 குறைநிரப்பு மதிப்பீடுகள் 2017 ஆம் ஆண்டின் போது நேரடியாக மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்தன. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை<br>--------------------------------------------<br>XIX ஆம் அத்தியாயத்தின் 5.2 மற்றும் 5.4 ஆம் பிரிவுகள் | அரச வீடுகளில் குடியிருக்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 246,511 வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | மத்திய மாகாண நிதி விதிக் கோவை | |
| (i) | ம.நி.வி 30.1 | நிதிஏற்பாடுகளை பெற்றுக்கொள்வதற்கு முன் ரூபா 1,423,831 ஆன சம்பளம் மற்றும் வேதனங்கள் சமூக நலன்புரி நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) | ம.நி.வி 30.2.1 | கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சினால் கிராம அபிவிருத்தி திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட மாகாண திட்டவட்டமான நிதிஏற்பாடுகளில் ரூபா 1,850,708 ஆன மீண்டெழும் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (iii) | ம.நி.வி 54.3.1, 54.5 மற்றும் 54.6 | 06 நிறுவனங்களின் 14 வாகனங்கள் விபத்திற்குட்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக பரீட்சித்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(iv) ம.நி.வி 164(ஆ)

ரூபா 1,241,200 பெறுமதியான 154 பொருள் விடயங்கள் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கு கிடைக்காதிருக்கையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(v) ம.நி.வி 183.1

புடவைக் கைத்தொழில் திணைக்களம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தில் முறையே ரூபா 7,226,977 மற்றும் ரூபா 7,519,234 கொடுப்பனவிற்காக பணம் கிடைத்ததாக உறுதிப்படுத்தும் பற்றுச்சீட்டுக்கள் கிடைத்திருக்கவில்லை.

(vi) நி.வி.476

மாகாண சபையின் சுகாதாரத் திணைக்களத்திற்குரிய 120 நிறுவனங்கள் 2017 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

(vii) நி.வி.477.2.1

2016 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார மருத்துவ உததியோகத்தர்அலுவலகங்கள் 15 இன் 194 பொருள் வகைகளுக்குரிய பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை சனநாயக குடியரசின் நிதிப் பிரமாணம்

நி.பி 770(3)

மோட்டார் வாகனப் பரிசோதகர் / இயந்திர பொறியியலாளர் பரிந்துரையொன்று இல்லாமல் மாகாண விவசாயத் திணைக்களத்தின் 06 வாகனங்கள் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

(உ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

| | |
|---|---|
| 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | 04 நிறுவனங்களுக்குரிய 23 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(ஊ) வரிசை அமைச்சின் சுற்றறிக்கைகள்

-------------------------------------------------------

| | | |
|---|---|---|
| (i) | 2007 திசெம்பர் 13 ஆந் திகதிய 2007/20 ஆம் இலக்க சுற்றறிக்கை | 05 கல்வி வலயங்களுக்குரிய 257 பாடசாலைகளின் 957 ஆசிரியர்கள் 08 ஆண்டு முதல் 28 ஆண்டுகள் வரையான காலமாக ஒரே பாடசாலையில் சேவை புரிந்து வந்தனர். |
| (ii) | 2016 மே 16 ஆந் திகதிய 2016/17 ஆம் இலக்க சுற்றறிக்கை | 2 தரத்திலிருந்து 11 ஆந் தரம் வரை மாணவர்கள் தொடர்பாக வரிசை அமைச்சு சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக 147 மாணவர்கள் 07 பாடசாலைளுக்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். |

(எ) பெறுகை வழிகாட்டல் கோவை

| | | |
|---|---|---|
| (i) | 3.3 ஆம் பந்தி | விசேட சந்தர்ப்பங்களுக்கு புறம்பாக கேள்வி கோரலின் ரூபா 64,693,244 பெறுமதியான 33 நிர்மாண வேகைளுக்காக கேள்வி வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 8.9.3 ஆம் பந்தி | விளையாட்டு திணைக்களத்திற்குரிய ரூபா 2,870,872 ஆன பாதனிகள்புடவைக் கைத்தொழில் திணைக்களம் ரூபா 3,492,373 ஆன கைத்தரி இயந்திரங்கள் கொள்வனவின் போது உடன்பபடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3. வருமான முகாமைத்துவம்

(அ) மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் மாகாண சபையின் ஒவ்வொரு வருமானத் தலைப்பின் கீழ் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமானக் குறியீட்டு இலக்கம் | வருமான விபரம் | 2017 திருத்திய மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017 உள்ளவாறான வருமானம் | 2016 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2016 உள்ளவாறான வருமானம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| ம -10 | உற்பத்தி மற்றும் செலவினத்தின் மீதான வரி | 6,756.11 | 6,633.98 | 6,030.66 | 6,173.57 |
| ம - 20 | விற்பனை மற்றும் கட்டணங்கள் | 697.89 | 771.90 | 735.34 | 806.87 |
| | மொத்தம் | 7,454.00 | 7,405.88 | 6,766.00 | 6,980.44 |

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளிலும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2017 | 2016 | 2015 |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஆதனங்களை கையளித்தல் மீதான முத்திரைக் கட்டணங்கள் | 32.40 | 22.88 | 24.13 |
| அரசின் காணிகள் சட்டத்தின் கீழ் கட்டணங்கள் | 15.83 | 9.83 | 2.77 |
| கணிய உரிமை தொடர்பான வரி | 2.00 | 0.40 | 0.20 |
| வியாபார புரள்வு வரி | 28.84 | 33.92 | 45.38 |

| | | | |
|---|---|---|---|
| மதுபான தண்டப்பணமும் வட்டியும் | 1.73 | 1.73 | 1.73 |
| அடகு வைப்போரிடமிருந்து அறவிடப்பட்ட கட்டணங்கள | 0.20 | 0.20 | 0.02 |
| | --------- | ---------- | ---------- |
| மொத்தம் | 81.00 | 68.96 | 74.23 |
| | ======= | ======= | ======== |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மதிப்பிடப்பட்ட 08 வருமான விடயங்கள் மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கிடையே ரூபா 35,616 முதல் ரூபா 419,412,614 வரையான அதாவது 13 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையான வீச்சில் குறைவொன்று காணப்பட்டதுடன் 05 வருமான விடயங்களுக்குரிய மதிப்பிடப்பட்ட 08 வருமான விடயங்கள் மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கிடையே ரூபா 4,550 முதல் ரூபா 100,510,190 வரை அதாவது6 சதவீதம் முதல் 2832 சதவீதத்திற்கு இடைப்பட்ட அதிகரிப்பு இடம்பெற்றிருந்தது.

(ii) 07 வருமான விடயங்களில் வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூா 497,700 முதல் ரூபா 221,663,608 வரை அதாவது 20 சதவீதம் முதல் 93 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

4. நிதி மீளாய்வு

-------------------------

நிதி விளைவுகள்

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தில் ரூபா 28,112,420,432 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 27,415,737,187 ஆக இருந்தது.

05. நியதிச்சட்டக் கணக்குகள் / வர்த்த முற்பணக் கணக்குகள் மற்றும் ஏனைய முற்பணக் கணக்கு

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

மத்திய மாகாண சபையின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட 3 நியதிச்சட்டக் கணக்குகளுக்கும் 2 வர்த்தக முற்பணக் கணக்குகளுக்கும் அபிப்பிராயமொன்று தெரிவிக்கப்படாதிருந்ததுடன் 3 வர்த்தக முற்பணக் கணக்குகளுக்காக முனைப்பழியுள்ள அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

5.1 நியதிச்சட்டக் கணக்குகள்

---

5.1.1 மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகாரசபை

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டியதாக காணப்படும் ரூபா 474,070 தொகையான போகம்பர பேருந்து நிறுத்துமிட நிலுவை வருமானம் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 54,308,442 தொகையான 08 கணக்கு விடங்களுக்குரிய சொத்துக்கள் மெய்மையாய்வு அறிக்கைகள், அட்டவணைகள், நிலையான சொத்துப் பதிவேடுகள் போன்ற பயன்பாட்டு ஆவணங்கள் உட்பட சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 ஆகஸ்ட் 02 ஆந் திகதி முதல் செயற்படுத்தப்பட்ட சஹசர செயற்திட்டத்திற்காக கிடைத்த நிதியத்திலிருந்து 79 சதவீதமான ரூபா 21,034,431 நோக்கத்திற்கு முரணாக ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு கொடுப்பனவு செய்வதற்கும் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்கு செலவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்திட்டம் செயற்படுத்தப்படும் வீதிகளில் பயணிகள் நுழைவுச்சீட்டினைப் பெற்றுக்கொள்வதற்காக முறையான காட்பத்திரங்களை பயன்பாட்டிற்கு எடுத்தமை தவிர தனியார் பேருந்து சேவை பழைய நிலைமையில் காணப்பட்டது.

(ஈ) ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்காக பங்களிப்புத் தொகை தாமதமாக கொடுப்பனவு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 434,951 ஆன மிகைக்கட்டணமொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகாரசபையின் கண்டி, மாத்தளை, நுவரெலியா மாவட்ட அலுவலகங்ககள மற்றும் பிரதான அலுவலகத்திற்கிடையே தரவு உள்ளடக்கம் தொடர்பாடல் மற்றும் முறையான தகவல் முறைமையொன்று ஏற்படுத்தும் செயற்திட்ட உடன்படிக்கை பிரகரம் ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன் உடன்படிக்கை மீறுவதற்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) ஹெட்டிபொல பஸ் நிறுத்துமிடத்தின் மேல் மாடி 2016 திசெம்பர் 05 ஆந் திகதிய நிதி ஆணைக்குழு செயலாளரின் FC/3/2/2017-(1) ஆம் இலக்க கடிதத்தின் 4.2 ஆம் பந்திக்கு முரணாக 2017 சனவரி மாதம் முதல் வியாபார நடவடிக்கைகளுக்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(எ) 1983 இன் 12 ஆம் இலக்க ஊழியர் பணிக்கொடை அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க பணிக்கொடை ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டு நிதியமொன்று உருவாக்கப்படாமல் இருந்ததுடன் மீளாய்வாண்டு வரை ஒதுக்கப்பட வேண்டிய பணிக்கொடை ஏற்பாட்டுத் தொகை ரூபா 57,597,159 ஆக இருந்தது.

5.1.2 மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை

--------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அதிகாரசபையில் சேவையில் ஈடுபட்டுள்ள 09 உத்தியோத்தர்களுக்கு தொழில் துறை படிகளாக ரூபா 2,295,000 தொகை மத்திய மாகாண ஆளுனரின் முன் அங்கீகாரம் இன்றி தகைமை பூர்த்தி செய்யாத 06 பொறியியலாளர்களுக்கு ரூபா 2,460,000 ஆன தொழில்துறைப் படியொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் 08 பொறியியலாளர்களுக்கு தொழில்துறை மற்றும் பொறியியலாளர் படிகளாக 02 கொடுப்பனவுகள் கொடுப்பனவு செய்யப்பட்டதன் காரணமாபக ரூபா 930,000 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் நிராகரிக்கப்பட்ட வாகனங்கள் வாடகைக்கு எடுத்து அதற்காக வாகன வாடகையாக ரூபா 1,344,020 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) குண்டசாலை மற்றும் கம்பொல நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகங்களில் முறையே ரூபா 122,856 பெறுமதியான 180 லீற்றர் தார் பீப்பாக்கள் 12 உம் பெறுமதி குறிப்பிடாத 180 லீற்றர் தார்பீப்பாய் 96 உம் நீண்டகாலமாக பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அந்த இரண்டு பொறியியலாளர் அலுவலகங்களில் ரூபா 3,375,000 பெறுமதியான 05 நில மட்டப்படுத்தும் இயந்திரங்கள் வருடாந்தம் வேலை செய்யப்பட்ட மணித்தியால அளவு 03 - 119 இற்கு இடைப்பட்டதாக இருந்தது.

(ஈ) தொலஸ்பாகை பெரவில பட்டிதலாவ வீதி அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்படாதிருக்கையில் இறுதி அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு ரூபா 4,085,919 தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் நிறைவேற்றப்படாத வேலைப்பகுதிகள் தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாதிருக்கையில் அவ்வீதியில் எஞ்சிய வேலைகளுக்குரிய கேள்வியும் அந்த ஒப்பந்தகாரருக்கே வழங்கப்பட்டிருந்தது.

(உ) 1983 இன் 12 ஆம் இலக்க ஊழியர் பணிக்கொடை அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க பணிக்கொடைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 21,978,049 தொகை முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அதிகாரசபை தாபிக்கப்பட்டு 09 வருடங்கள் காலம் கடந்திருந்த போதிலும் ஆண்டறிக்கை தயாரிக்கப்படாதிருந்ததுடன் நிறுவனம் தொடர்பாக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

5.1.3 மத்திய மாகாண வலய பொருளாதார அபிவிருத்தி நிறுவனம்

-----------------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2008 இன் 01 ஆம் இலக்க மத்திய மாகாண வலய பொருளாதார அபிவிருத்தி நிறுவன நியதிச்சட்டத்தின் 6.5 பிரிவின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை நிதிக்கூற்றுக்கள் 2018 யூன் 30 ஆந் திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன் நிறுவனத்தை தாபித்த நியதிச்சட்டத்தின் பிரகாரம் உதவிப் பணிப்பாளர் பதவியொன்று மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் இரண்டு உதவிப் பணிப்பாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(இ) வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய கட்டுகித்துல சிற்றுண்டிச்சாலையை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு இணங்கும் வகையில் குத்தகை நிபந்தனைகள் மீறி இரண்டாம் தரப்பினருக்கு 2 சந்தர்ப்பங்களில் 03 வருடங்கள் வீதம் உப குத்தகை வழங்கப்பட்டிருந்ததுடன் அவர்களால் ரூபா 6 மில்லியன் செலவிடப்பட்டு நிரந்தர நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டு மாதிரி ரீதியான மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. 2018 யூன் 30 ஆந் திகதி வரையில்

இரண்டாம் தரப்பினரிடமிருந்து ரூபா 1,274,890 ஆன நிலுவை உப குத்தகை பணத்தை அறவிடுவதற்கு இருக்கும் போது மீண்டும் ஒரு முறை அந்த நிறுவனத்திற்கு உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

5.2 வர்த்தக முற்பணக் கணக்குகள்

-----------------------------------------------------

5.2.1 மத்திய மாகாண புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் 581202 ஆம் விடய புடவைக் கைத்தொழில் வேலைத்தளங்களை தாபித்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான வர்த்தக முற்பணக் கணக்கு

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டிலிருந்து நிலவி வரும் கடன் விற்பனைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 11,687,027 தொகையையும் பொருள் மெய்மையாய்வு மூலம் இனங்காணப்பட்ட ரூபா 7,507,631 ஆன பற்றாக்குறையொன்றையும் வருடக் கணக்காக பிரதம செயலாளரின் பெயரில் காணப்படும் கிடைக்க வேண்டிய ரூபா 16,712,065 தொகையையும் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 30,526,783 ஆன 07 கணக்கு விடயங்களுக்குரிய காலப்பகுப்பாய்வு, மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் அட்டவணைகள் போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) 29 புடவைக் கைத்தொழில் நிலையங்களில் 43 கைத்தறி இயந்திரங்கள் மற்றும் 144 அகன்ற இயந்திரங்கள் செயற்பாடற்ற நிலைமையில் காணப்பட்டன.

(ஈ) 76 புடவைக் கைத்தொழில் நிலையங்களில் இலக்கிடப்பட்ட 43 கைத்தறி புடவை உற்பத்தி உள்ளவாறான உற்பத்தியுடன் ஒப்பிடும் போது ஐம்பது சதவீதத்தை விட குறைந்த அளவில் உற்பத்தி செய்ப்பட்டிருந்தன.

5.2.2 மத்திய மாகாண கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வியாபர மேம்படுத்தல் திணைக்களத்தின் 582202 ஆம் இலக்க உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பான முற்பணக் கணக்கு

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

(அ) 04 ஆண்டு முதல் 13 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குரிய 03 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 6,463,685 ஆன கிடைக்க வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 282,864,209 ஆன காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதிக்காக உரித்தினை உறுதிப்படுத்தும் பதிவேடுகள் காணப்படவில்லை.

5.3 ஏனைய முற்பணக் கணக்குகள்

5.3.1 மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

02 திணைக்களங்களிலும் பிரதேச செயலகமொன்றிலும் 02 ஆண்டுகளை விஞ்சிய இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 89,274,841 மற்றும் இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களுக்காக தீர்க்கப்பட வேண்டிய ரூபா 43,177,446 ஆன கடன் மீதி என்பவற்றை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் மரணித்த, ஓய்வுபெற்ற மற்றும் சேவையை வரிதாக்கிச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து 02 ஆண்டுகளை விஞ்சிய கடன் மீதி ரூபா 3,328,917 ஆக இருந்தது.

5.3.2 மாகாண சபை உறுப்பினர்களுக்கான முற்பணக் கணக்கு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண சபை உறுப்பினரொருவர் உறுப்புரிமையை விட்டுச்செல்லல், உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குதல், மரணித்தல் அல்லது மாகண சபை திடீரென கலைக்கப்படல் போன்ற காரணங்களின் பேரில் உறுப்புரிமை இல்லாமல் போகும் சந்தர்ப்பமொன்றில் மாகாண சபைக்கு அறவிடப்பட வேண்டிய சகல கடன் தொகையையும் ஒரே தடவையில் முழுமையாக அறவிடுவதற்கு மாகாண சபை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 4 உறுப்பினர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 558,106 கூட்டுத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 ஆம் ஆண்டில் பதவியை விட்டுச் சென்ற உறுப்பினர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 157,114 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

6. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

6.1 செயலாற்றல்

-----------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 03 தொகுதிகளுடன் கூடிய மெதரட்ட வங்ஷ கதா புத்தகத்தின் வேலைகள் 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 5,088,107 தொகை செலவிடப்பட்டு முதலாவது தொகுதியில் 1,500 புத்தகங்கள் அச்சிடப்பட்டு அதில் 1,354 புத்தகங்கள் 2018 சனவரி வரையிலும் உரிய பிரிவுகளுக்கு பகிர்ந்தளிக்கப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) பதிவு செய்யப்பட்ட 1,435 சங்கங்களில் 959 சங்கங்கள் மாத்திரம் 2017 ஆம் ஆண்டில் கணக்காய்வினை திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதில் 279 சங்கங்கள் கணக்காய்வினை பூர்த்தி செய்திருக்கவில்லை. அதன் பிரகாரம் கணக்காய்வு திட்டமிடப்படாத மற்றும் பூர்த்தி செய்யப்படாத சங்கங்களின் எண்ணிக்கை 755 அதாவது 53 சதவீதமாக இருந்தது.

(இ) மத்திய மாகாணத்தில் இலத்திரனியல் வருமான அனுமதிப்பத்திரங்கள் (ERL) முறைமை ஸ்தாபிக்கப்பட்டு 02 வருடங்கள் பூர்த்தியடைந்திருந்த போதிலும் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரங்களுக்காக அறவிட வேண்டியிருந்த வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் தெளிவாக பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் உரிய கணனி நிகழ்ச்சித்திட்டங்கள் மேம்படுத்தப்படாதிருந்ததால் இந் நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்தியதன் மூலம் எதிர்ப்பார்க்கப்பட்ட பிரதான நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சலுகை வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக வீடமைப்பு திணைக்களம் மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி மேற்கொண்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் வங்கி உத்தேச நலனாளிகளுக்காக கடன் தொகை வழங்காமையால் மொத்தம் ரூபா 18,152,465 தொகை வங்கியில் வைத்திருக்கப்பட்டிருந்தமையால் அப்பணத்தை ஆக்கபூர்வமான செயற்பாடொன்றில் முதலீடு செய்வது பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்த நலன்கள் திணைக்களத்தினால் இழக்கப்பட்டிருந்ததுடன் நேர்கடன் மற்றும் மறைமுக கடன் முறைமையின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 2,742,911 கூட்டுத்தொகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அறிவினை நோக்கிய பொருளாதார மூலதன அடிப்படையாக பாடசாலை முறைமையை மீள்நிர்மாணம் செய்யும் செயற்திட்டம் (TSEP) இற்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடுகளிலிருந்து 2017 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூபா 742,256,159 அதாவது 37 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்திற்குரிய ரூபா 7,460,000 பெறுமதியான 06 நிர்மாணங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் இச் செயற்திட்டத்திற்குரிய 2017 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 6,119,235 பெறுமதியான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் 2018 மார்ச் வரையிலும் தேவையான பாடசாலைக்கு இடையே பகிர்ந்தளிக்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

(ஊ) மாகாண சுகாதார அமைச்சு 06 செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டிடத் திணைக்களத்திற்கு ரூபா 141.89 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2018 மார்ச் வரையிலும் திட்டமிடப்பட்ட இலக்கை நோக்கி அடைய முடியாமல் இருந்தது.

(எ) மாகாண சுகாதார அமைச்சு டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 2,912,000 ஆன நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ரூபா 1,926,185 ஆன செயற்பாடுகள் அதாவது 66 சதவீதம் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நன்னீர் மீன் வளப்பினை பிரசித்தப்படுத்தப்படுத்தும் நோக்கில் மாகாண விவசாய அமைச்சினால் ரூபா 1,040,000 செலவில் மாத்தளை மாவட்டத்தின் கலேவள பெலிகமுவ தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபையின் பண்ணையில் தடாகமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் நன்னீர் மீன்பிடி வளர்ப்பிற்கு போதியளவில் நீர் இயலளவொன்று காணப்படவில்லை.

6.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

---------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 28 குடும்ப அங்கத்தர்வர்கள் மடொல்கலே தோட்ட உனதகல நீர் திட்டத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் நீர் குடிப்பதற்கு பொருத்தமற்றதென உறுதிப்படுத்தப்பட்டிருக்கையில் அது தொடர்பாக மக்களை அறிவூட்டுவதற்கு பன்வில பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) அரச காணி கட்டளைச் சட்டம் தொடர்பான செயற்பாட்டுக் கோவையின் 269 ஆவது கட்டளையின் பிராகரம் உள்ளூராட்சி மன்றங்கள் / அரச திணைக்களங்களுக்குரிய நிறுவனங்கள் தாபிக்கப்பட்டுள்ள காணிகளை உரிய நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 05 பிரதேச செயலகங்களுக்குரிய 252 நிறுவனங்கள் மற்றும் 569 பாடசாலைகளுக்குக் காணியை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1982 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 65 நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 63 மானிய உறுதிப்பத்திரங்கள் 2018 பெப்ரவரி 27 ஆந் திகதி வரையிலும் வலப்பனே பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டிருந்தன.

(ஈ) நுவரெலியா பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திற்குரிய காணியொன்று சட்டரிதியான குத்தகை உடன்படிக்கையொன்று இல்லாமல் 1984 நவம்பர் முதல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் உடமை கொள்ளப்பட்டு வரும் 2.52 ஹெக்டேயரான இக்காணிக்காக 2012 ஆம் ஆண்டின் பின்னர் எவ்வித குத்தகை தொகையொன்றும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக வெவ்வேறு நோக்கங்களுக்காக 05 நிறுவனங்களுக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த காணி தொடர்பாகவும் பின்தொடர் நடவடிக்கை போதியளவில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) ஹங்குரன்கெத்த அரசின் காணிகளில் 2005 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 04 தொடர்பாடல் கோபுரங்களுக்காக நீண்டகால குத்தகை அடிப்படையில் குத்தகையை அறவிடுவதற்கு 131 கிராம சேவையாளர் பிரிவுகளில் 341 அனுமதியற்ற குடியிருப்பாளர்களை சட்டரீதியாக்குவதற்கு 2018 பெப்ரவரி 21 ஆந் திகதி வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வத்தேகம வலய கல்வி அலுவலகத்திற்குரிய பாடசாலையொன்றினால் 57 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக உடமை கொண்டிருக்கும் விளையாட்டரங்கின் ஒரு பகுதியில் பேருந்து நிறுத்துமிடமொன்றை நிறுவுவதற்காக குண்டசாலை பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(எ) முதல் நியமனத் திகதியின் பிரகாரம் தகுதிகாண் காலம் பூர்த்தி செய்து 03 ஆண்டுகள் முதல் 38 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த ஹட்டன், கம்பொல, கண்டி மற்றும் தெதுவர கல்வி வலயங்களின் 80 ஆசிரியர்களின் நியமனம் நிரந்தரமாக்கப்படாதிருந்ததுடன் ஹட்டன் கல்வி வலயத்தின் பாடசாலைகளில் 464 ஆசிரியர்களுக்கு 2017 திசெம்பர் வரை 01 மாதம் முதல் 09 ஆண்டுகள் வரையான காலப்பகுதியொன்று தாமதாகியிருந்த போதிலும் சம்பள உயர்வு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) தெநுவர, கம்பொல, வத்தேகம, தெல்தெனிய, வலப்பனே மற்றும் ஹங்குரன்கெத்த வலயங்களில் வேறு சேவைகளுக்காக இணைக்கப்பட்டிருந்த 19 ஆசிரியர்களுக்காக மாகாண சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள ரூபா 28,086,170 ஆன சம்பள மீள் நிரப்பல் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) கண்டி மாவட்ட சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திறுகுரிய 335 வீடுகளில் 123 பயன்படுத்தாமல் காணப்பட்டதுடன் அதில் 39 சிதைவடைந்தும் உருக்குலைந்த வீடுகளாக இனங்காணப்பட்டிருந்தன.

(ஒ) சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் ரூபா 41,461,389 நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டிருந்த வில்கமுவ பிரதேச செயலகப் பிரிவின் சிறுநீரக நோயாளர் சிகிச்சையகம் வைத்தியர்கள் இல்லாமையால் அக்கட்டிடங்களும் உபகரணங்களும் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஓ) மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகதார திணைக்களத்திற்கு 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,158,840 ஆன நிதிஏற்பாடு உரிய செயற்திட்டங்களுக்கு பயன்படுத்தப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததுடன் மின்சக்தி அமைச்சினால் செயற்படுத்தப்படாத 03 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 1,440,128 தொகை 07 ஆண்டுகள் பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டு பின்னர் மாகாண சபை வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஔ) மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட செயற்பாட்டு நிலைமையிலுள்ள 41 கூட்டுறவுச் சங்கங்களில் சனச, தோட்ட வீடுகள், பாடசாலை மற்றும் ஏனைய கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா

158,405,066 மற்றும் நிலுவை தொகையை வருடக் கணக்காக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

6.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) காற்றுச்சீராக்கி பொருத்தப்படாதிருந்த நிறுவனமொன்றுக்கு பாமசியொன்றை நடாத்திச் செல்வதற்கு வியாபார பெயர் பதிவு சான்றிதழொன்று பன்வில பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014, 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த 05 உரித்து பத்திரங்களுக்குரிய மானிய உரித்து பெறுனர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டினை அடிப்படையாக கொண்ட 03 காணிகளுக்குரிய மதிப்பிடப்பட்ட ரூபா 1,485,000 தொகை காணியை பயன்படுத்துவோரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) கம்பொல வலயத்தின் 4 பாடசாலை மொத்தக் காணி அளவு 3.1281 ஹெக்டேயர் வருடக் கணக்கிற்காக அத்துமீறிய குடியிருப்புக்கு உட்பட்டு வந்திருந்ததுடன் அது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(ஈ) இலங்கை டெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி கோபுரத்தை அனுமதியின்றி பயன்படுத்தியமைக்காக 2005 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 2,972,840 ஆன குத்தகை தொகையை அறவிடுவதற்கு தும்பளை பிரதேச செயலகத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) சபை செயலாளர் அலுவலகத்தினால் 2012 ஆம் முதல் செயற்படுத்தப்பட்ட மாகாண சபை அமைச்சர்களுக்காக மடிக்கணனி வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 26 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2,789,100 பெறுமதியான 26 கணனிகளை உடன்படிக்கை பிரகாரம் மீண்டும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) வலப்பனே பிரதேச செயலக பிரதேசத்தின் மானெல்வல ஹைடரோபவர் நீர் மின்நிலைய செயற்திட்டத்திற்காக பயன்படுத்தியிருந்த அரசின் காணிக்காக 2003 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை வருடாந்த அனுமதிப்பத்திரத்திற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,042,340 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) நுவரெலியா பிரதேச செயலக பிரதேசத்தில் செயற்படுத்தப்பட்ட சிறிய மின் நிலையங்களிலிருந்து அறவிடப்பட வேணடிய ரூபா 7,718,600 ஆன குத்தகை மற்றும் அரச காணிகளிலிருந்து நீண்டகால குத்தகையாக அறவிடப்பட வேண்டிய ரூபா 909,154 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

6.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) மத்திய அரசின் எந்தவொரு சுற்றறிக்கையினாலும் கண்காணிப்பு உறுப்பினர் படிகள் கொடுப்பனவிற்கு இடமளிக்கப்படாதிருக்கையில் பிரதான அமைச்சின் செயற்பாடுகளை கண்காணிப்பதற்காக 10 உறுப்பினர்களுக்கு 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 1,371,255 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மத்திய மாகாண பாடசாலையொன்றின் பாடசாலை அபிவிருத்தி சபை கணக்கிலிருந்து வழங்கப்பட்ட ரூபா 621,956 கூட்டுத்தொகையான 33 காசோலைக் கொடுப்பனவுகள் பெற்றுக்கொள்பவராக காசேட்டில் குறிப்பிடப்பட்ட நபருக்கு பதிலாக காசோலையில் பெயர் குறிப்பிடப்பட்ட பெறுவோனுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) குறைந்த தரம் காரணமாக மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் அகற்றப்பட்ட காலாவதியான மருந்துகளின் பெறுமதி அண்ணளவாக ரூபா 3,028,815 ஆக இருந்ததுடன், மீாய்வாண்டின் போது கண்டி மாவட்டத்திற்குரிய வைத்தியசாலைகளுக்காக கோரப்பட்ட 76 மருந்து வகைகளுக்குரிய மருந்துகள் கிடைத்திருக்கவில்லை.

(ஈ) மாகாண விவசாய அமைச்சினால் அவசர அபிவிருத்தி தேவைப்பாட்டிற்கான நிதி ஏற்பாடுகளில் அவசரமில்லாத அபிவிருத்தி நடவடிக்கையொன்றுக்காக ரூபா 1,348,150 தொகையும் குறைந்த வசதிகள் உடைய கோயில்களில் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கான நிதி ஏற்பாடுகளிலிருந்து உயர்ந்த பொருளாதார

வசதியுள்ள பக்தர்கள் இருக்கின்ற 4 கோயில்களுக்காக ரூபா 2,210,000 மற்றும் அரசின் நிதி ஏற்பாடுகளை செலவு செய்ய முடியாத முன்பள்ளியொன்றுக்காக ரூபா 1,241,010 செலவிடப்பட்டிருந்தது.

(உ) மின்சக்தி அமைச்சினால் சிறிய நீர் மின் நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக சங்கமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2,000,000 தொகையில் ரூபா 1,708,451 தொகை மீண்டும் அமைச்சிற்கு பெற்றுக்கொள்ளப்பட்டு பொது வைப்புக் கணக்கில் 03 ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டு நிதி ஆணைக்குழுவின் அங்கீகாரமொன்று இல்லாமல் பாடசாலையொன்றுக்கு டிரான்ஸ்போமர் ஒன்றினை வழங்குவதற்காக விடுவிக்கப்பட்டிருந்தது.

6.5 செயற்பாடற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

---------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உறுப்பினர்களுக்காக ரூபா 20,958,609 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த சுற்றுலா விடுதி குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது.

(ஆ) பழைய சபை செயலகத்தின் சபை மண்டபம் மற்றும் தளபாடங்கள் உட்பட உபகரணங்கள் 05 ஆண்டு காலமாகவும் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 39,881,670 செலவில் நிர்மாணிக்கப்பட்ட முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்தின் 14 அறைகள் 03 ஆண்டு காலமாகவும் விளைவற்றுக் காணப்பட்டதுடன் ஆளணி மற்றும் பயிற்சி பிரிவில் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிலையத்திற்கு சொந்தமாக தங்குமிட விடுதியும் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டன.

(இ) தெல்தெனிய வலயத்தின் பாடசாலையொன்றில் ரூபா 24.83 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டிருந்த நிர்வாக அலகு மற்றும் 03 உயர்தர வகுப்பு ஆய்வுகூடங்களுடனான இரண்டு மாடிக் கட்டிடம் 06 ஆண்டு காலமாகவும் ரூபா 2,700,000 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த இரசாயனப் பொருட்கள் மற்றும் ஆய்வு கூட உபகரணங்கள் 07 ஆண்டு காலமாக குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது.

(ஈ) தெல்தெனிய மாவட்ட ஆதார வைத்தியசாலையில் 2017 ஏப்ரல் மாதத்தின் போது திறந்து வைக்கப்பட்ட அதி தீவிர சிகிச்சை பிரிவு 03 சத்திர சிகிச்சை அறைகளுடன் கூடிய சத்திரசிகிச்சை கூடம், இரத்த வங்கி மற்றும் உரிய மருத்துவ அலகினுள் ஸ்தாபிக்கப்பட்டிருந்த ரூபா 76,941,550 பெறுமதியான மருத்துவ

உபகரணங்கள் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன.

(உ) யட்டிநுவர சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்திற்கும் திகன புனர்வாழ்வு வைத்தியசாலைக்கும், யக்கஹபிட்டிய பிரதேச வைத்தியசாலைக்கும் மெனிக்ஹின்ன பிரதேச வைத்தியசாலைக்கும் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கும் 2006 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த 226 மருத்துவ உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

6.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

2 கட்டங்களின் கீழ் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்ட நாலந்த கெடிகே அண்மித்த சுற்றுலா வசதிகள் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக ரூபா 2,442,841 செலவிடப்பட்டிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் ஆக்கபூர்வமான செயற்பாடொன்றிற்காக பயன்படுத்த முடியாத நிலைமையில் காணப்பட்டது.

6.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண கல்வித் திணைக்களத்தின் 03 நிகழ்ச்சிகளுக்குரிய மேலும் அறவிடுவதற்கு காணப்படும் ரூபா 14,985,229 ஆன பெறுமதியான 139 நட்டங்கள் சேதங்கள் சம்பவங்களில் ரூபா 8,666,209 பெறுமதியுடைய 83 சம்பவங்கள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்தன.

(ஆ) விபத்திற்குட்பட்ட 123 வாகனங்களின் நட்டமான ரூபா 16,665,286 தொகை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்படாதிருந்ததுடன், அதில் ரூபா 7,086,818 தொகை நட்டத்திற்குரிய 39 வாகனங்கள் விபத்திற்குட்பட்டு 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தது.

6.8 ஒப்பந்த செயற்பாட்டிலான குறைபாடுகள்

-----------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தெல்தெனிய வலயத்தில் பாடசாலையொன்றில் ரூபா 1,900,149 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட பெண்கள் மலசலகூட முறைமை நிர்மாண வேலைக்குரிய மதிப்பிடப்பட்ட மற்றும் அளவீட்டுப் பத்திரங்களுக்கு இடையே வேறுபாடுகள் காணப்பட்டதுடன் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட வேலை விடயங்கள் குறைபாடுகளுடன் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அனைத்து மின்சாரம் மற்றும் நீர் குழாய் உப பாகங்கள் பொருத்தப்பட்டிருந்த போதிலும் கட்டிடத்திற்கு மின்சார இணைப்பும் நீர் வழங்கலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்குறித்த பாடசாலையின் ஆய்வுகூட கட்டிடத்தை திருத்தியமைத்தல் மற்றும் புதிதாக பகுதியொன்றை சேர்த்துக்கொள்வதற்கான நிர்மாண வேலையின் அளவீட்டுப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்ட வேலை விடயங்கள் முறையாக நிறைவேற்றப்படாமல் இருந்ததுடன் ரூபா 34,560 ஆன 229 நில ஓடுகளும் ரூபா 35,639 பெறுமதியான 64 உட்கூரை தகடுகளும் கூடுதலாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மதிப்பீட்டின் பிரகாரம் வேலை விடயங்கள் நிறைவேற்றப்படாமை காரணமாக நிர்மாணத்திற்காக வழங்கப்பட்ட பணத்தில் 46 சதவீதம் அதாவது 921,141 சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) மாகாண பிரதான அமைச்சினால் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 30 ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 337.53 மில்லியனான 21 ஒப்பந்தங்களில் 13 இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் 07 இன் செயன் முன்னேற்றம் பலவீனமான நிலைமையில் காணப்பட்ட காரணத்தினால் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் ஒப்பந்த நிறுவனங்களிடமிருந்து அரசிற்கு அறவிடப்பட வேண்டிய முற்பணம் மற்றும் செயலாற்றல் பிணைகளின் மொத்த பெறுமதி ரூபா 49,849,343 ஆக இருந்தது.

6.9 செயற்திட்டங்களை ஆரம்பிக்காமல் கைவிடல்

-----------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 ஆம் ஆண்டில் நிறைவேற்றுவதற்கான திட்டமிடப்பட்டிருந்த ரூபா 60,479,905 ஆன 04 செயற்திட்டங்கள் 2017 திசெம்பர் 31 வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அம்பகமுவ பிரதேச சபையினால் ரூபா 4,296,555 ஆன மதிப்பிடப்பட்ட பெறுமதியுடன் கூடிய 03 குடிநீர் செயற்திட்டங்கள் மற்றும் தோட்ட வீதியொன்று ஆரம்பிக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தன.

6.10 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு (வரிசை) நிதி ஏற்பாட்டின் கீழ் செயற்படுத்தப்பட்ட ரூபா 50,040,860 ஆன 03 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ரூபா 1,190,406 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த ஹுலுகங்கை நீர் வீழ்ச்சிக்கு நுழைவு வீதி மற்றும் பார்வையாளர் மண்டபம் 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையில் எஞ்சிய வேலைகள் பூர்த்தி செய்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கட்டிடங்கள் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படுகின்ற ரூபா 22,740,000 பெறுமதியான 4 செயற்திட்டங்களின் செயன்முன்னேற்றம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ஈ) நுவரெலியா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் இருதநோய் பிரிவின் நிர்மாணத்திற்காக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மொத்தம் ரூபா 17 மில்லியன் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிர்மாணங்களின் செயன்முன்னேற்றம் 25 சதவீதமாக காணப்பட்டது.

(உ) மாகாண ஆயுர்வேத வைத்தியசாலைக்காக 96 கட்டில்களுடன் கூடிய வார்ட் தொகுதியொன்றை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்கான ரூபா 15 மில்லியன் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி அளவில் அடிக்கல் வைத்தல் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

6.11 பதவியணியினர் நிருவாகம்

-----------------------------------------------

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

6.11.1 மாகாண சபை அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் நியதிச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட நிறுவனங்களின் ஊழியர் எண்ணிக்கை (பாடசாலை மற்றும் சுகாதார பதவியணியினர் தவிர)

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

| | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் ஊழியர் எண்ணிக்கை | மிகை ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 996 | 639 | 368 | 14 |
| மூன்றாம் நிலை | 302 | 188 | 117 | 8 |
| இரண்டாம் நிலை | 7,583 | 4,934 | 2,726 | 101 |
| ஆரம்ப நிலை | 6,814 | 5,453 | 1,148 | 432 |
| ஒப்பந்த அடிப்படை | - | 35 | | - |
| அமைய | | 188 | - | |
| ஏனையவை | 341 | 730 | 65 | |
| மொத்தம் | 16,036 | 12,167 | 4,424 | 555 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 ஏப்ரல் 25 ஆந் திகதிய 06/2006 ஆம் இலக்க அரச சேவையின் சம்பள மீளமைப்பு என்ற தலைப்பில் வழங்கப்பட்டிருந்த பொது நிர்வாகச் சுற்றறிக்கை இணங்க மத்திய மாகாண இறைவரிச் சேவை பிரமாணம் 2018 மே வரையிலும் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மின்சக்தி அமைச்சின் 44 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் ஒரு ஊழியருக்குரிய மிகையை முறைப்படுத்துவதற்கும் அமைச்சு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அமைச்சின் கீழ் காணப்படும் 2 திணைக்களங்களுக்கும் 2 அதிகாரசபைகளுக்கும் முறையற்ற விதத்தில்

வெவ்வேறு பதவிகளுக்கு 24 உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டின் போது இணைக்கப்பட்டிருந்தனர்.

(இ) பொறியியலாளர் சேவைகள் திணைக்களத்தின் கடமைகளின் தன்மையின் பிரகாரம் அத்தியவசிய அளவில நில அளவையாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் இயந்திர செயற்பாட்டாளர்கள் போன்ற 08 அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் மற்றும் ஏனைய சேவைகளில் வெற்றிடங்கள் 46 காணப்பட்டதுடன் தேவையான ஊழியர் எண்ணிக்கையை தீர்மானித்து அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் மாகாண விளையாட்டு திணைக்களத்தின் 23 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், மாகாண விளையாட்டு பணிப்பாளர் பதவி 2013 யூலை 04 ஆந் திகதி முதல் மற்றும் சிரேஷ்ட விளையாட்டு உத்தியோகத்தர் பதவி 2014 பெப்ரவரி 08 ஆந் திகதியிலிருந்து வெற்றிடங்களாக காணப்பட்டன.

6.11.2 பாடசாலைப் பதவியணியினர்

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| அதிபர் | 1,491 | 1,106 | 416 | 31 |
| பிரதி அதிபர்கள் | 196 | 531 | 55 | 390 |
| ஆசிரியர்கள் | 24,818 | 27,809 | 1,189 | 4,180 |
| சிற்றூழியர்கள் மற்றும் உதவி பதவியணியினர் | 2,285 | 1,735 | 951 | 401 |
| மொத்தம் | 28,790 | 31,181 | 2,611 | 5,002 |

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மிகை ஆசிரியர்களின் எண்ணிக்கை 4,180 ஆக இருந்தது.

(ஆ) கம்பளை கல்வி வலயத்திற்குரிய 32 பாடசாலைகளில் 96 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் கொத்மலை கல்வி வலயத்திற்குரிய 19 பாடசாலைகளில் 01 ஆண்டு முதல் 11 வரையிலும், ஹட்டன் கல்வி வலயத்திற்குரிய 20 பாடசாலைகளில் 01 ஆண்டு முதல் 22 வரையிலும், நுவரெலியா கல்வி வலயத்திற்குரிய 21 பாடசாலைகளில் 02 ஆண்டு முதல் 21 வரையிலும், ஹங்குரன்கெத கல்வி வலயத்திற்குரிய 24 பாடசாலைகளில் 01 ஆண்டு முதல் 17 வருடங்கள் வரையான காலப்பகுதியில் அதிபர் பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்களை பூர்த்தி செய்திருக்கவில்லை.

(இ) 2017 மார்ச் 16 ஆந் திகதி அளவில் வில்கமுவ கல்வி வலயத்திற்குரிய 51 பாடசாலைகளின் 19 பாடசாலைகளில் அதிபர் சேவையின் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 42 பாடசாலைகளில் 107 ஆசிரியர் வெற்றிடங்களும் 181 ஆசிரியர்களுக்கு மிகையொன்று காணப்பட்டது. அவ்வாறே வலயத்திற்குரிய பாடசாலைகளில் 613 ஆசிரியர்களில் 51 பேர் வெவ்வேறு காரணங்கள் காரணத்தின் பேரில் தற்காலிகமாக வேறு வலயங்களுக்கு இணைக்கப்பட்டிருந்தனர்.

(ஈ) தெல்தெனிய வலயத்தின் 98 பாடசாலை உதவியாளர்கள் மிகையாக காணப்பட்டதுடன் அவ்வலயத்திலும் வத்தேகம வலயத்திலும் 25 காவலாளிகள் மிகையாக காணப்பட்டனர்.

6.11.3 சுகாதார பதவியணியினர்

-------------------------------------------

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 1,233 | 960 | 273 |
| மூன்றாம் நிலை | 384 | 303 | 81 |
| இரண்டாம் நிலை | 4,584 | 3,498 | 1,086 |
| ஆரம்ப நிலை | 3,253 | 2,502 | 751 |
| ஏனையவை (அமைய, தற்காலிகம்) | - | 291 | - |
| மொத்தம் | 9,454 | 7,554 | 2,191 |

மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 04 ஊழியர் மட்டங்களுக்காக 9,454 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 7,263 ஊழியர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் 2,191 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. இவ் வெற்றிடங்களுக்கு இடையே 37 விசேட வைத்திய நிபுணர்களுக்கும், 266 வைத்தியர்களுக்கும் தாதியர் சேவைகளில் 355 பேருக்கும் குடும்ப சுகாதார சேவையில் 155 பேருக்கும் சுகாதார செயற்பாட்டு உதவியாளர் பதவிகள் 552 உம் வெற்றிடங்களாக காணப்பட்டன. ஆரம்ப மட்ட பதவிகளில் காணப்பட்ட 751 வெற்றிடங்களில் 291 இற்காக அமைய அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர்.

## 7. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------------------------

### 7.1 பெறுகைகள் திட்டம்

--------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தே.பெ.மு. சுற்றறிக்கை இலக்க 08 மற்றும் அரசின் பெறுகை வழிகாட்டி கோவையின் 3.2 ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் ரூபா 8,135,960 ஆன தளபாடங்கள் மத்திய மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் உரிய காசோலை வழங்குனர் நிறுவனத்தின் பெயரிற்கு வழங்கப்படாமல் தனிப்பட்ட பெயருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) பெறுகை வழிகாட்டி கோவையின் 5.3.11(அ) மற்றும் 5.4.8(ஆ) மத்தியின் பிரகாரம் நிர்மாண வேலை ஒப்பந்தத்திற்காக கேள்வி மற்றும் செயலாற்றல் பிணை பாதுகாப்பு, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் 06 பாடசாலை கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,757,500 பெறுமதியான பிணைகள் போலியானதாக இருந்தன. மேலும் 04 கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 5,844,880 பெறுமதியான இரண்டு முற்பண பிணைகளும் ரூபா 1,418,800 பெறுமதியான செயலாற்றல் பிணைகளின் செல்லுபடிக்காலம் உரிய கோவைகள் மற்றும் வங்கி ஆவணங்களுக்கு இடையே வேறுபாடுகளுடன் காணப்பட்டன.

(இ) மத்திய மாகாண சபையின் பாடசாலையொன்றினால் 72 சந்தர்ப்பங்களை போது ரூபா 3,023,415 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக பெறுகை செயற்பாடு பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

7.2 வருடாந்த அறிக்கை சபையில் சமர்ப்பித்தல்

1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் 23(2) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கடந்த ஆண்டுகளின் மத்திய மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மாகாண சபையில் சமர்ப்பித்தல் நிலைமை பின்வருமாறு

| ஆண்டு | அறிக்கை திகதி | சபையில் முன்வைத்த திகதி |
|---|---|---|
| 2011 | 2013.03.28 | 2015.09.08 |
| 2012 | 2014.07.04 | 2016.02.16 |
| 2013 | 2015.01.07 | 2015.05.05 |
| 2014 | 2015.10.08 | 2015.11.03 |
| 2015 | 2016.11.16 | 2017.07.18 |
| 2016 | 2017.11.29 | 2018.06.11 |

7.3 தீர்வுசெய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

மின்சக்தி அமைச்சு, மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை, வீடமைப்புத் திணைக்களம், சுகாதார சேவைகள் திணைக்களம், பொறியியலாளர் சேவைகள் திணைக்களம், கைத்தொழில் அமைச்சு மற்றும் அதன் கீழான 4 திணைக்களங்களின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகள் மாகாண பொதுக் கணக்கு குழுவினால் பரீட்சிக்கப்பட்ட பின்னர் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படாத 197 பந்திகள் தொடர்பாக 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் தீர்மானமொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை.

7.4 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

மாகாண சபையின் அடிப்படை நோக்கங்களுக்கு இணங்காத வகையில் 2010 ஆம் ஆண்டு முதல் இரண்டு அரச வங்கிகளில் ரூபா 1,289,452,326 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன.

08. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வவ்போது மத்திய மாகாண நிறுவனத் தலைவர்கள் மற்றும் பிரதான செயலாளர் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) வருமான நிர்வாகம் | (i) வருமான மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமற்று இருந்தமை. |
| | (ii) வருமானம் மற்றும் நிலுவை வருமானம் அறவிடப்படாமை. |
| | (iii) வருமானம் உழைக்கக்கூடிய செயற் திட்டங்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்காமை |
| (ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) நிலையான சொத்துக்கள் குறைப்பயன்பாடு |
| | (ii) வருடாந்த பொருள் மெய்மையாய்வு செய்யப்படாமை |
| (இ) மனித வள முகாமைத்துவம் | பதவியணியினர் மிகை மற்றும் வெற்றிடங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (ஈ) ஒப்பந்த நிர்வாகம் | (i) அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களை செயற்படுத்தப்படாமை |
| | (ii) செயற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களின் செயன்முன்னேற்றத்தைப் பரீட்சிக்காமை |
| (உ) நிதிக் கட்டுப்பாடு | நிதியங்களை நோக்கத்திற்கு உட்பட்ட செயற்பாடுகளுக்காக பயன்படுத்தாமை |